விலை: சதம் 75

தரத்தினில் சிறந்த
மான் - முயல் - வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஓடுகளையே
பாவியுங்கள்

மு.தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

போன்: 7493

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 27 துல்ஹஃ 12 இதழ் 210
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12 9-1981

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும்
திருத்தவும் புதிதாக வாங்கவும்
விஜயம் செய்யுங்கள்.

டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174

# புலோலி வங்கி கொள்ளை வழக்கு

# நால்வருக்கு 10 வருட கடூழியம்

(கொழும்பு)

**புலோலி வங்கிக் கொள்ளை வழக்கில், 4 எதிரிகளுக்கு தலா பத்து வருடக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது!**

இவ்வழக்கில், 1976ம் ஆண்டு மே மாதம் பத்தாம் திகதி புலோலி கிராமிய வங்கியில் 8 லட்சத்து 57 ஆயிரத்து 453 ரூபா பெறுமதியுள்ள நகைகளையும், ஏழாயிரத்து 355 ரூபா ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்ததாகவும் கார், ஒன்றைக் கடத்தியதாகவும் பன்னிரண்டு பேர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

### 12 பேர் மீது வழக்கு

இவ்வழக்கில், தங்கராசா மகேந்திரன், நாராயணலிங்கம் சந்திரமோகன், கார்த்திகேசு நல்லையா, அலெக்ஸாண்டர் ஜெயக்கொடி, ஆறுமுகம் நற்குணநந்தன், சின்னத்துரை தவராசா, வேலுப்பிள்ளை பாலகுமார், நவரத்தினம் லோகநாதன், சின்னத்துரை நித்தியானந்தன், தம்பிமுத்து சென்றிமோகன், சிங்கராயர் கமிலஸ் நிமால், ஜோசப் டேவிட் போல் ஜெயம் ஆகிய பன்னிரண்டு பேர்மீது குற்றஞ் சாட்டப்பட்டு கடந்த ஐந்து வருடங்களாக விசாரணை நடைபெற்று வந்தது.

### முதலில் 4 பேர் விடுதலை

இதில் தம்பிமுத்து சென்றிமோகன், வேலுப்பிள்ளை பாலகுமார், ஜோசப் டேவிட் போல் ஜெயம், நாராயணலிங்கம் சந்திரமோகன் ஆகிய நான்குபேரும் விசாரணையின் இடைநடுவில் விடுதலைசெய்யப் பட்டனர்.

### ஒருவர் காலமானூர்

மற்றுமொரு எதிரியான சிங்கராயர் கமிலஸ் நிமால் காலமானூர்.

### மூவர் நாட்டில் இல்லை

வழக்கில் மிகுதியாகவிருந்த ஏழு பேரில் மூவர் நாட்டில் இல்லை.

மிகுதியான நால்வரான தங்கராசா மகேந்திரன், கார்த்திகேசு நல்லையா, அலெக்ஸாண்டர் ஜெயக்கொடி, ஆறுமுகம் நற்குணநந்தன் ஆகிய நால்வருக்கும் தலா பத்து வருடம் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நான்குபேரில் இருவர் நாட்டில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது

கொழும்பு புள்ளர்ஸ் வீதியிலுள்ள மேல்நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணை முடிவில் நீதியரசர் திரு ரியூடர் டி அல்விஸ் மேற்படித் தீர்ப்பை வழங்கினூர்.

எதிரிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம், சட்டத்தரணிகள் திரு. ஜி. குமாரலிங்கம், திரு. எஸ். நவரத்தினம், திரு. கே. வி. எஸ், ஸ்ரீஸ்கந்தகுமார், திரு. கே. வி. தவராசா ஆகியோர் ஆஜரானூர்கள். ம

இலங்கை வன்செயலுக்கு கண்டனம்:

# தமிழ் நாட்டில் இன்று ஹர்த்தால்

சென்னை, செப். 11

இலங்கையில் நிகழ்ந்த வன் செயல்களின் போது பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், வன்செயல்களைக் கண்டித்தும் அ தி மு க அரசு ஏற்பாடு செய்துள்ள ஹர்த்தால் நாளை (இன்று) சனிக்கிழமை நடைபெறுகிறது.

ஹர்த்தால் தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் என்று தமிழக முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் இன்று அறிவித்தார்

## "இலங்கைதமிழர் நிலைபற்றி பெரிதும் உணர்கின்றேன்"

—பிரதமர் இந்திரா

சென்னை, செப் 11

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள் குறித்து பெரிதும் உணர்கின்றேன், என்று இன்று சென்னைக்கு விஜயம் செய்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்,

"மாநில அரசுசனிக்கிழமை-

(6-ம் பக்கம் பார்க்க

## அரியாலை பஸ் கொள்ளை: நான்குபேர் கைது

(யாழ்ப்பாணம்)

அரியாலை சந்தியில் சுமார் ஒரு மாதத்துக்குமுன்னர் நடைபெற்ற சுமார் 300 ரூபா பஸ் கொள்ளை சம்பவத்தில் பொலிஸாரினுல் தேடப்பட்ட ஐவரில் நான்குபேர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் கொள்ளையின்போது பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் றிவோல்வரும் கைப்பற்றப்பட்டுள்ளது

## வான் விபத்து: ஒருவர் பலி! அறுவர் படுகாயம்!!

### அல்லைப்பிட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மீனவர்கள் வந்துகொண்டிருந்த வான் ஒன்று நேற்று அதிகாலை பனையுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியானூர்! 6 பேர் பலத்த காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குருநகரைச் சேர்ந்த 7 மீனவர்கள் ஊர்காவற்றுறைக் கடலில் மீன்பிடித்து விட்டு வானில்வரும்பொழுது அல்லைப்பிட்டிச்சந்தியில் வானின் முன் டயர் காற்றுப் போய்விட்டதால் பனை ஒன்றுடன் மோதியதாகவும் ஆர். குலம் (42வயது) என்பவர் ஸ்தலத்தில் மரணமானதாவும் மற்றைய 6பேரும் படுகாயமடைந்து யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

என். றுபேர்ட் (26 வயது) ஆழ்வாப்பிள்ளை (56), சிங்கராசா (56), செபஸ்ரீன் (65), சிவராசா (33, ஜெயரட்ணம் (29) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்களில் ஒருவர் மிகவும் ஆபத்தான நிலையிலிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (மா)



ஐஸ்கட்டி தொழிற்சாலை
இன்று திறப்புவிழா

தன்னியக்க முறையில் தயாரிக்கப்படும்
25 கி கிராம் எடையுள்ள
ஐஸ்கட்டி தொழிற்சாலை

இன்று 12-9-81 சனிக்கிழமை
மாலை 4-30 மணிக்கு

மங்கள விளக்கு ஏற்றுதல்: யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர்
திரு. சு. நடராசா அவர்கள்

உற்பத்தி ஆரம்பித்து வைத்தல்:
இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர்
திரு. கா. வே. முத்துக்குமாரசுவாமி அவர்கள்

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

சரும்சன் என்ரர்பிறைசஸ்

பலாலி வீதி, [0867] வயாவிழான்

## சிறிமா கூட்டத்தில் குண்டுவீச்சு இருவர் விடுதலை

(கொழும்பு)

ஆகஸ்ட் 12ம் திகதி கம்பஹாவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கூட்டத்தில் குண்டெறிந்த சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட 14சந்தேக நபர்களில் எம். விம்ஸி, பி. ஆ. மகிந்த ஆகிய இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு சாட்சியமில்லையென பொலிசார் தெரிவித்ததைத் தொடர்ந்து கம்பஹா மாஜிஸ்டிரேட் திரு. திஸ்ஸ எக்கநாயக்க அவர்களை விடுதலை செய்தார்.

## பிஸ்கால் விற்பனவு

மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

சின்னம்பு மார்க்கண்டு, கரணவாய் வடக்கு -வழக்காளி

வழ. இல:- 15676

எதிர்

சந்தக்குட்டி வீரகத்தி, வீரபத்திரர் கோவிலடி, பொலிகண்டி.

மேலே சொல்லப்பட்ட எதிராளி, மேற்சொல்லப்பட்ட இலக்க வழக்கின் 1980- மார்கழி மாதம் 18-ம் திகதிய தீர்வையின் பிரகாரம் வெளிமாத்தில் விபரிக்கப்பட்ட தீர்வைத் தொகை ரூ. 2527/20ம், 1980-9-26ம் திகதி தொடக்கம் 1980-12-18ம் திகதி வரை 24% வட்டி ரூபா 85-80 சதம் மொத்தம் 2613/- ரூபா. 1980-12-18 தொடக்கம் 1981-3-18 வரை 2613/- ரூபாவிற்கு வட்டி 9% வட்டி ரூபா 59/-உம், செலவு பணம் 228-05ம் மொத்தம் 2900-05உம் இன்று வரை கட்டத் தவறியமையால் இதற்காக எதிராளியின் கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் பிரயோசனங்களையும் 1981ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21ம் திகதி புதன்கிழமை (1981-10-21ம் திகதி) முற்பகல் 10-30 மணியளவில் குறித்த ஆதனத்தில் இருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

### விற்பனை செய்யப்படும் ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிவிஷன் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று கரணவாய் கொற்றுவத்தைக் குறிச்சியிறை நெடுங்கேணி நிபர. 4 இதில் வடக்குப் புறமாக ஒழுங்கைக்கு விட்டு மீதிக்கு ஆகும்படி நிபர. 3 குளி 10. இதில் கிழக்குப் புறமாக நிபர. 2 குளி 2 நீக்கி மீதிக்கு நிபர. 1 குளி 8 எல்லை கிழக்கு சாத்திலிங்கம் பெண் சின்னம்மாவுக்குடையவர் தனம். வடக்கு கைஒழுங்கை மேற்கு சின்னவன் வேலுவுக்கும் மறுபேருக்குமுடையவர் தனம், தெற்கு குட்டி சாத்தானுக்கும் மறுபேருக்குமுடையவர் தனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகள் தென்னைகள் அடங்கலும்.

க. செல்வராசா
கதிரிப்பிள்ளை செல்வராசா
பிஸ்கால்.

மாவட்ட நீதிமன்றம்
பருத்தித்துறை.
11-9-81.

0906

## பிஸ்கால் ஏலவிற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட மன்று

வழ. இல: எம். எஸ்/3710

தியாகராசா கைம்பெண் தங்கமுத்து மல்லாகம்.
வழக்காளி

எதிர்

1. முருகேச சுப்பிரமணியமும் பெண்
2. சரஸ்வதியும் மல்லாகம்.

எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் காக/சு 3710ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1981ம் ஆண்டு ஐப்பசிமாதம் 12ந் திகதி (12-10-81) திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 5000/-மும் இன்னும் இவ்வழக்கு தொடர்ந்த திகதியாகிய 1-7-1980 தொடக்கம் தீர்வைத் திகதியாகிய 29-8-80 வரையும் ரூபா 2500/-க்கு 24% வீதவட்டியும் இன்னும் முழுத்தொகையும் இறுக்கும்வரையும் கூட்டிவரும் தொகைக்கு வருடமொன்றிற்கு நூற்றிற்கு 5% வீதவட்டியும் செலவுதொகை 609.65ம்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிவிஷன் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோயிற்பற்று மல்லாகம் இறை ஆராய்ச்சி சீமா நிலப்பரப்பு 2 (இரண்டு) இதற்கு எல்லை கிழக்கு சோமசுந்தரம் சிவபாதசுந்தரத்தின் ஆதனமும் எதிரிக்குரிய ஆதனமும் வடக்கு சோமசுந்தரம் சிவபாதசுந்தரத்துக்குரிய ஆதனம். மேற்கு சேனாதிராசா பரஞ்சோதிக்குரிய ஆதனமும் சோமசுந்தரம் பரஞ்சோதிக்குரிய ஆதனமும் தெற்கு கைபொழுங்கை இவ்வெல்லைப்படி இடங்கலும்.

சு. வ. கணேசன்
பிஸ்கால்

மாவட்ட மன்று
மல்லாகம்.
9-9-81

0903

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

கரவெட்டி வடக்கு காலஞ்சென்ற வைத்திலிங்கம் கனகராசா என்பவரின் மரண சாதனமில்லாத சொத்து விடயத்தில்

இறந்தவர்
கனகராசா கைம்பெண் மனோன்மணி சோணுதிய வளவு கரவெட்டி வடக்கு தற்சமயம் லட்சுமி வீரேசன், வளசுமிலை.

மனுதார்

எதிர்

இல: 1084/Teety

1. கனகராசா மோகனதாஸ்
2. கனகராசா தர்மதாஸ்
3. கனகராசா கமலராணி
4. கனகராசா சுரேந்திரன்
5. கனகராசா யோகராணி
6. சுந்தையா கந்தசாமி எல்லோரும் கரவெட்டி வடக்கு

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன மற்ற வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதிவப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு மார்கழி மாதம் 14-ந் நாள் முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றின் முன்னர்தோன்றிஅவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைவு,
ஆ. ந. இராமச்சந்திரன்
மனுதாரின் சட்டத்தரணி
மன்றத்தின் கட்டளைப்படி
(ஒப்பம்)
பதிவாளர்

14-12-79
மீளவழங்கவும் 8-2-80
மன்றத்தின் கட்டளைப்படி
(ஒப்பம்)
பதிவாளர்

8-2-80
மீள வழங்கவும் 11-4-80
மன்றத்தின் கட்டளைப்படி
(ஒப்பம்)
பதிவாளர்

11-4-80
மீளவழங்கவும் 23-5-80
மன்றத்தின் கட்டளைப்படி
(ஒப்பம்)
பதிவாளர்

23-5-80
மீளவழங்கவும் 8-8-80
மன்றத்தின் கட்டளைப்படி
(ஒப்பம்)
பதிவாளர்

8-8-80
மீளவழங்கவும் 10-10-80
மன்றத்தின் கட்டளைப்படி
(ஒப்பம்)
பதிவாளர்

10-10-80
மீளவழங்கவும் 12-12-80
மன்றத்தின் கட்டளைப்படி
(ஒப்பம்)
பதிவாளர்

12-12-80
மீளவழங்கவும் 27-2-81
மன்றத்தின் கட்டளைப்படி
(ஒப்பம்)
பதிவாளர்

27-2-81
மீளவழங்கவும் 11-6-81
மன்றத்தின் கட்டளைப்படி
(ஒப்பம்)
பதிவாளர்

11-6-81
மீளவழங்கவும் 24-7-81
மன்றத்தின் கட்டளைப்படி
(ஒப்பம்)
பதிவாளர்

24-7-81
மீளவழங்கவும் 18-9-81
மன்றத்தின் கட்டளைப்படி
க. செல்வராசா
பதிவாளர்

0889

## பிரிகேடியர் வீரதுங்க இராணுவ தளபதி

(கொழும்பு)

பிரிகேடியர் திஸ்ஸ இன்டிக்கா வீரதுங்க அடுத்தமாதம் 14ம் திகதி முதல் இலங்கை இராணுவ தளபதியாக பொறுப்பேற்றுள்ளார்.

50 வயதான இவர் பிரிட்டன், இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இராணுவப் பயிற்சி பெற்றவர்.

இலங்கையின் பல பாகங்களில் இணைப்பு அதிகாரியாக கடமையாற்றிய இவர் 1979ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலும் இணைப்பு அதிகாரியாக கடமையாற்றியவர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

அடுத்த மாதத்தில் இருந்து தற்போது இராணுவ தளபதியாக கடமையாற்றும் டெனிஸ் பெரேரா ஓய்வுபெறுகின்றார். (கு)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், 148 கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலு கோபாலன் என்பவரின் சொத்தினதும் உடமைப் பொருட்களினதும் விடயத்தில்

(மரணமெய்தியவர்)

கோபாலன் கைம்பெண் குண்டுமணி, இல. 148 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணதத்துவ
நியாயாதிக்கம் இல. 3613

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனமில்லாத தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்து போனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனு 1981-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற ஆணைப்படி
தா. குலஞானம்
பதிவாளர்

1981-ம் ஆண்டு மே மாதம் 14-ம் திகதி.
வரைந்தவர்:
C. C. சோமசேகரம்
மனுதாரின்
சட்டத்தரணி

0897

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இங்கிலாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய கெல்வனேட்டர் 12. 4 க. அடி குளிர்சாதனப் பெட்டி ஒன்று விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: இ. குருசாமி, குருவிதி காங்கேசன்துறை. 0900

சொக்குவில் கிழக்கில் மாதனைக் கோவிலுக்கு அண்மையில் 2½ பரப்புக் காணி வரைவாசிக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு மாணிக்கவாசகர், 'பொற்பதி' ஸ்ரேசன் வீதி, கொக்குவில். 0904

கொக்குவில் கிழக்கில் சகல வசதிகளுடன் 3 1/2 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு கா. இ. செ. முத்துக்குமாரு பிரசித்த நொத்தாரிசு 121, முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் தொலைபேசி 7460 யாழ்ப்பாணம் அல்லது "துர்க்கா ஹோம்" சுன்னாகம் தொலைபேசி 274 சுன்னாகம். 0912

8 Sri CB 250 Honda திருத்தி அமைக்கப்பட்டது. நல்லநிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. இ. வேலாயுதர் ஆசிரியர், ஞானபாஸ்கரோதய வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 0913

### தேவை

மின் ஒட்டுவேலையும் கடைச்சல் யந்திரவேலையும் தெரிந்த அனுபவமுள்ளவர்கள் தேவை. முகவரி 138, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0894

மணமகள் தேவை, உரும்பிராய் இந்து உயர் வேளாள குலத்தைச் சேர்ந்த வயது 28 ஏழுச்செவ்வாய் தோசம் உள்ள கொழும்பில் தனியார் கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் 750/- ரூபாய் வருமானம் பெறும் மணமகனுக்கு ஏழுச்செவ்வாய் தோசமும் நல்ல அழகும் உள்ள மணமகள் தேவை. முதல் கடிதத்தில் முழுவிபரத்தையும் அறியத்தரவும். விளம்பர இல: 0911 C/O ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 0911

### பயிற்சி

விசேட ஒரு மாத எலக்ட்ரிக்கல் பயிற்சி 30 - 09 - [81 ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology, 9, Stanley Road, Jaffna. 0910

### சேவை

யாழ்ப்பாணம் டவுனில் கடை கணக்குகள் (Audit) ஆடிற் முறைப்படி ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்க C. சுப்பிரமணியம், கைதடி வடக்கு, கைதடி. 0902


PATRICIAN INDUSTRIAL INSTITUTE
59, St. Patrick's Road—Jaffna.

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**
**(1-10-1981)**

- Motor Mechanism
- Electrical Wiring
- Welding

செய்முறை, அறிமுறை பயிற்சி உட்பட

குறிப்பிட்ட தொகை மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

தொடர்புகொள்ளவும்:

பதிவாளர்

0882

### மணிவாக்கு

வாழ்க்கையின் உத்தம உண்மைகளை நேரில் கண்டு வாதாடுவதற்கு நான் காடுகளை ஏற்கனவே நாடினேன்; வாழமுடியவில்லையே என்ற ஏமாற்றத்துடன் அங்கு அடக்கம் செய்யப்படுவதை நான் விரும்பவில்லை.

—ஹென்றி தோரோ

# நமது நோக்கு

## வாயைக் காப்பாய்

நாட்டின் குழப்பநிலை இன்னும் முற்றாகச் சீரடைந்ததாகவில்லை

போக்குவரத்தில் அபாயம் நிலவுகிறது

குறிப்பாக றெயில் பிரயாணத்தில் இங்கும் அங்கும் அசம்பாவிதங்கள் தொடர்கின்றன; கிராமங்களில் கோஷ்டிச்சண்டை; பாதுகாப்பு உள்ள இடங்களிலும் கொள்ளையும் களவும்

புயல் ஒய்ந்த இடத்தும் சுமுகமான சுவாத்தியம் பலம் பெறவில்லை யென்பது தெளிவு

நாட்டின் ஐ.ஜீ.பி. பொலிசாருக்கு விடுத்த உத்தரவு இதனை விளக்குகிறது வன்செயல்களின் அடித்தளத்தைக் கண்டுபிடிப்பதில் உஷார் நிலையைத் தளர்த்தாது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டிருக்கிறார்

வடபகுதி மக்களுக்கு பொலிஸாரில் அவநம்பிக்கை ஏற்பட சில காரணங்கள் இருந்தபோதும், நாட்டைப் பழைய நிலைக்குக் கொண்டுவருவது பொலிஸாரின் திறமையிலும் விழிப்புணர்விலும் பெரிதும் தங்கியிருக்கிறது.

பொலிஸாரின் அதி அற்புதத்திறமை மட்டும் போதுமானதல்ல. பொதுமக்கள், பொறுப்பான மக்கள் குழுக்கள் அவர்களுக்கு உதவமுன்வரவேண்டும்.

அரசியல்வாதிகள், மக்கள் தலைவர்கள் பொறுப்பான அதிகாரிகள் உதவி செய்யாவிட்டாலும், தடையாகவிருக்காவிட்டால் அதே பெரும் உதவியாகும்; விமர்சனம் தொடர்வது வேதனைக்குரியது,

நாட்டில் இவ்வளவுதூரம் உயிர், உடமை மானம் சமாதான வாழ்வு இவற்றிக்கு சேதம் ஏற்பட்டிருக்கும் போதும் அடுத்தபடியென்ன வென்பது தெரியாமல் பயனற்ற அநாகரிப் பேச்சில் ஈடுபடுகின்றோம். இதுவே எமது நெடுங்காலசாதனை.

மௌனம் கலக நாஸ்தி என்பதும் மௌனம் பொன்னைபோல் போற்றப்பட வேண்டுமென்பதும் துறவிகளுக்குமட்டும் சொல்லப்பட்டதல்ல சாதாரண மக்களுக்கும் தக்க சந்தர்ப்பங்களில் அது அவசியம்.

மனம், வாக்கு. காயம் மூன்றும் அடக்கியாளப்பட்டு மாசு தீர்ந்த பான்மை பெறவேண்டும். நீதிக்கு முரண்பட்ட எண்ணங்கள் உளத்தில் இல்லாதிருப்பது அவசியம், பேச்சும் சமாதானத்துக்கும் மன நிம்மதிக்கும் உதவாத வகையில் இருக்கலாகாது.

எண்ணத்தில் மாசு இல்லையே பேச்சு எப்படியிருந்தாலும் என்ன என்று வாதித்தல் இக்கால கட்டங்களில் முழுமடமையாகும்.

பயனற்ற பேச்சைப்போல பயங்கரமானது இக்காலத்தில் வேறொன்றுமில்லை, என்பதை நாம் கடின பாடமாகப் படித்திருக்கிறோம். சூடுகண்ட பூனை மாதிரியாவது நடந்துகொள்ள விவேகமில்லையா?

ஒரு வசைப்பேச்சினால் உண்டாகும் தீமை, தீய செயலினால் உண்டாவதைவிட அதிகமாகும்.

மற்ற நற்குணங்கள் எல்லாம் இருந்த போதிலும் நாகரிகமான பேச்சு இல்லாவிட்டால் மற்ற நற்குணங்களுக்கு இருட்டடைப்பு ஏற்படும் பண்பாட்டின் முக்கியமான அம்சம் அநாகரிகப்பேச்சை விலக்கல்.

ஐ ஜீ.பி பொலிஸாருக்கு விடுத்திருக்கிற பொறுப்பான கட்டளைகள் நிறைவேற்றப்பட்டால் வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்கள் பலவகையிலும் நன்மையடையலாம். நாட்டுக்கு நிம்மதி வாழ்வுவிரைவில் ஏற்பட இடமுண்டு.

வன்செயல்களில் சம்பந்தப்பட்ட அனைவரையும் சட்டத்தின் பிடியில் சிக்கவைக்கவேண்டும். இந்தக் கட்டளை மிகமுக்கியமானது ஆண்மையுள்ள, தேசப் பற்றுடைய தொண்டர்கள் உதவிபுரியமுன் வந்தாலொழிய இது நிறைவேற்றப்படுவது அசாத்தியம் இந்தப்பணிக்கு வாய்காப்பது இன்றியமையாத பண்பு.

இடம்பெயர்ந்த அகதிகள் பழைய இருப்பிடங்களுக்குச் செல்வதில் விருப்பமற்றிருக்கின்றனர். பூரண பாதுகாப்பு வழங்கி அவர்கள் தத்தம் இருப்பிடங்களுக்குப் போய்ச்சேர உதவவேண்டும் இங்கும் பண்பற்ற மக்கள் அவர்களுக்கு பழைய இருப்பிடங்கள் கிடைகள் கிடைக்காமல் முட்டுக்கட்டை போடமுடியும்.

இம்முக்கியமான சேவையில் நற்பிரஜைகள் சிக்கலான நிலைமையைச் சீரமைக்க முன்வரவேண்டும்.

அரசியல்வாதிகளின் தூரநோக்கற்ற பேச்சுக்களாலும் செயல்களாலும் சாதாரண மனிதன் பயங்கரவாதியாக மாறுகிறான். பயங்கரவாத வர்க்கம் ஒன்று என்றும் நிரந்தரமாக நாட்டின் வாழ்வில் இடம்பெறுவதில்லை. எனவே முள்ளிலே சேலையைப் போட்டவர்கள் மெதுவாக சாதுரியமாக அதனை எடுக்கக்கடமைப்பட்டவர்கள்.

அரசியல் கட்சித்தலைவர்கள், பிரமுகர்கள் இவ்வேளையிலும் எரிந்த வீட்டில் பிடுங்கினது அறுதி என்ற பாங்கில் செயற்படுவது ஆச்சரியமல்ல. ஆனால் விசனத்துக்குரியது.

"சமயவாதிகள் தத்தம் மதங்களில் அமைவதாக அரற்றி மலைந்தனர் என்பது மணிவாசகம்.

உள்ளூரிலும் வெளியூரிலுமுள்ள அரசியல்வாதிகள் இந்த நோய்க்குத் தங்கள் குளிகையே சிறந்ததென்கின்றனர். பயனற்ற பேச்சு.

குறிப்பாக அரிசிப்பொரியோடுதிருவாரூர் என்ற பாங்கில் வந்த இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் திரு எம். கல்யாணசுந்தரம் உதவிய யோசனைகள் இங்கும் கிடைக்கும், இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவது நலம் என்றும், இவ்வன் செயல்களுக்கு அமெரிக்கா பின்னணியாக இருந்திருக்கலாமென்றும் சொன்னதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன. பயனில்லாத சொற்கள்!

## இரத்தினபுரி சம்பவங்கள்:

# 4 புதிய நீதிமன்றங்கள் விசாரணை நடத்தும்

[கொழும்பு]

கடந்த மாதம் இரத்தினபுரி பகுதியில் ஏற்பட்ட கலவரச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கென நான்கு புதிய மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் அமைக்கப்படுகின்றன.

இரத்தினபுரி மாவட்ட அமைச்சர் ஜனாப் எம். எல். எம். அபுசாலி இத்தகவலை வெளியிட்டார்,

கடந்தமாதம் ஏற்பட்ட, தீயிடல், கொள்ளையடித்தல் போன்ற வன்செயல்கள் தொடர்பாக உள்ள வழக்குகளை இந்த நீதிமன்றங்கள் விசாரிக்கும்.

இந்த நீதிமன்றங்கள் ஏற்கனவே இரத்தினபுரி, பெல்மதுளை, றக்குவானை, பலாங்கொடை ஆகிய நகரங்களில் இயங்கத்தொடங்கி விட்டதாக மாவட்ட அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில நடந்த கலவரங்கள் இனவாதத்தையும்விட அதிகமானது என்றும் இயக்கரீதியில் காடைத்தனம் நடைபெற்றதாகவும் நகரிலும் தோட்டங்களிலும் நடந்த தாக்குதல்களால் பஸ்களிலும் லொறிகளிலும் வந்து காடையர்கள் சேர்ந்துகொண்டனர் என்றும் இதனால் ஏற்பட்ட அடையாளங்கள் பலகாலம் மறையாமலிருக்கக்கூடும் என்றும் ஜனாப் அபுசாலி தெரிவித்துள்ளார்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் பெரும்பகுதி பொலிஸ்-ராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நகைகள், மற்றும் பெறுமதியான பல பொருட்கள் அவைகளின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் நோயாளி ஒருவரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட ஒரு நகையும் இப்பொருட்களில் ஒன்று என அவர் தெரிவித்துள்ளார்.

# யானை கட்டித் தேர் இழுத்த ஆலயம்

சாவகச்சேரியைச் சேர்ந்த மீசாலை வடக்கு என்னும் கிராமம் சைவப் பெருமக்கள் செறிந்து வாழும் பழம்பெரும் கிராமம். இவ்வூர் மத்தியில் புத்தூர் வீதி, கண்டி வீதிசைச் சந்திக்கும் இடத்துக்கு அண்மையாக தட்டான் குள வீதியில் விலாசமான திருக்குளத்தை முன்புறத்தில் கொண்டு அருள் பாலித்து வருகின்றார் திருநீலகண்டப் பிள்ளையார்.

கோவில் இல்லா ஊரில் குடிகள் பாழ் எனக்கருதிய முதாதையர் கி. பி. 1872—1875 காலப்பகுதியில் கோயிலடி என்னும் இக்காணியில் இவ்வாலயத்தை அமைத்ததாக சாசனங்களிலிருந்து அறிகின்றோம். அன்று தொட்டு இவ்வூர்மக்கள் வழிபாடு செய்து உய்திபெறும் தலமாக இது விளங்கிவருகின்றது.

கி. பி. 1913-ம் ஆண்டுக்கு முன்பதாக இவ்வாலயம் திசையெல்லாம் அருள் பரப்பி அடியார்களை ஈர்த்து வந்ததாக அறிகின்றோம். இங்கு யானை கட்டித்தேர் இழுக்கப்பட்டது என்றும் இவ்விழாவைக் கண்டு களிக்கவும் வரம் பெறவும் மக்கள் யாழ்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் குதிரைவண்டிகளில் வந்து கூடுவார்கள் என்றும் கர்ண பரம்பரைக் கதை ஒன்று கூறுகின்றது. இதைத்தொடர்ந்து வந்த காலப்பகுதி இவ்வூர் மக்களுக்கு ஓர் இருட்காலமாக அமைந்தது. உற்சவம் கைவிடப்பட்டு 1918 ம் ஆண்டளவில் கோயிற்தேரு மிருசுவில் மன்னகுறிச்சி கந்தசாமி கோவிலுக்கு விற்கப்பட்டதாக அறிகின்றோம்.

1971ம் ஆண்டில் வழிபாட்டுக்காரர்களும் பொது மக்களும் சேர்ந்து பரிபால சபை ஒன்றை அமைத்தனர். இதைத் தொடர்ந்து ஆலயம் நன்கு வளர்ச்சி பெற்று வருகின்றது. மாதத்தில் ஒரு முறையாவது விசேட அபிஷேகமோ விழாவோ நடைபெறுத மாதம் இல்லை எனலாம். வேதமகா விதிகளுக்கு அமைய நாள் தோறும்இரண்டு காலப் பூசை நடைபெறுகின்றது. சித்திரை வருடப் பிறப்பு சித்திரா பௌர்ணமி ஆனி உத்திரத்தை தொடக்க விழாவாகக் கொண்டு பூங்காவனத்துடன் முடிவு பெறும் 12 நாள் அலங்கார உற்சவம், ஆவணிச் சதுர்த்தி, மானம்பூ. ஐப்பசி வெள்ளி, திருவெண்பாவை. மகா சிவராத்தி போன்றவை சிறப்பாக நடைபெறுகின்றன. கந்த சஷ்டி, தைப்பூசம் போன்ற விசேட தினங்களில் விசேட பூசைகளும் வெள்ளி தோறும் கூட்டுப்பிராத்தனையும் இடம் பெறுகின்றன. மந்துவில், வரணி இயற்றாலை, தாவளையற்றாளை, கரவெட்டி குறிலிக் குறிஞ்சி, மீசாலை வடக்கு கரைச்சிப் பகுதியில் உள்ள கோரக்கன் கட்டு, ஊரியன் ஆகிய கிராமங்களில் இவ்வாலயத்துக்குத் தருமசாதனம் செய்யப்பட்ட காணிகள் உண்டு

இன்று ஆலய பரிபாலன சபையின் பட்டமளிப்பு விழாவும் நடைபெறுகிறது.

'யோகி'

## உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி

[பச்சிலைப்பள்ளி]

யாழ் மாவட்டத்தின் புதிய உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியாக திரு த மார்க்கண்டு நியமனம் பெற்றுள்ளார்

இவர் முன்பு பச்சிலைப்பள்ளிப் பிரிவு, பருத்தித்துறைப் பரிவு ஆகியவற்றில் உதவி அரசாங்க அதிபராகவும், முல்லைத்தீவில் உதவி கூட்டுறவு ஆணையாளராகவும் பணிபுரிந்தவராவார். ...—

## சந்நிதியில் முதலுதவிச் சிகிச்சை நிலையம்

(பண்டத்தரிப்பு)

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின்முதலுதவிச்சிகிச்சை நிலையம் தொண்டைமானாறு செலவச்சந்நிதி ஆலயத்தில் நேற்று தொடக்கம் திறக்கப்பட்டுள்ளது.எதிர்வரும் 14ம் திகதி தீர்த்த உற்சவம் முடியும்வரை இந்தநிலையம் இயங்குமென்று சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தெரிவித்தார்.

## வாள்வெட்டு வழக்கில் இரு எதிரிகளுக்கும் ஒத்திவைத்த சிறை

[புலோலி]

பொலிகண்டி மண்வெட்டி வெட்டு, வாள்வெட்டு வழக்கில் எதிரிகள் இருவருக்கும் ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பொலிகண்டியைச் சேர்ந்த நாகலிங்கம் செல்லப்பாக்கியம், சின்னையா சிவஞானசுந்தரம், ஆகிய இருவருக்கும் மண்வெட்டி, மரம் அறுக்கும்வாள் என்பனவற்றால் வெட்டிக் காயப்படுத்தினார்கள் என வேலுப்பிள்ளை சிவகுமார், வேலுப்புள்ளை இரத்தினசிங்கம் ஆகியோருக்கு எதிராக வல்வெட்டித்துறைப் பொலிசார் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு சே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வந்தது. எதிரிகள் இருவரும் குற்றவாளிகளாகக்காணப்பட்டனர்.

1ம் எதிரிக்கு 6 மாத கடூழியச் சிறைத் தண்டனையும் 100 ரூபா அபராதமும் 2ம் எதிரிக்கு 6 மாத கடூழியச் சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது. சிறைத் தண்டனைகள் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் நீதவான் தீர்ப்பில் தெரிவித்தார்.

# மட்டுநகர், திருமலைக்கு லட்சம் பனம் விதைகள்

[பச்சிலைப்பள்ளி]

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடுவதற்காக ஒரு லட்சம் பனம் விதைகள் பளையிலிருந்து கொண்டுசெல்லப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளைப் பனம் பொருள் அபிவிருத்திச்சபை மேற்கொண்டுள்ளது.

பனம்விதைகள் பளைப்பகுதியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், தெங்குப் பனம் பொருள் அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் மூலம் வாங்கப்படவுள்ளது. ஒவ்வொரு பனம் விதையும் ஏழுசதம் வீதம் பளைப்பகுதியில் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில உள்ள நிறுவனங்களும், பொது மக்களும் பனை பயிரிடுவதில் ஊக்கம் காட்டுவதாகப் பனம் பொருள் அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமிழகத்திலும் இப் பிரச்னை அங்குள்ள உள் விவகாரங்களின் பலப்பரீட்சைக்கு உதவுகிறது.' நாய் வேட்டைக்குத் தவிலடிபடுகிறது.

பயனில் சொல் விலக்குக.

## புதியமண்டபத் திறப்புவிழா

அல்லைப்பிட்டி கிராமஅபிவிருத்திச்சங்க புதிய மண்டபத் திறப்புவிழா இன்று மாலை 4 மணிக்கு ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் அவர்களால் திறந்துவைக்கப்படும். ......

## சமுத்திர தீர்த்தம்

[பச்சிலைப்பள்ளி]

இயக்கச்சி மல்வில் விஷ்ணு ஆலயத்தின் சமுத்திரதீர்த்த உற்சவம் நாளை ஆழியவளை சமுத்திரத்தில் நடைபெறும்.

[இ]

# இல. தமிழர் பிரச்னையில் இந்திராவின் ஆர்வம்: கருணாநிதி திருப்தி!

சென்னை, செப் 11

இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்னைகளில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி காட்டிவரும் ஆர்வம் தி. மு. க. வுக்கு திருப்தி அளிக்கிறது.

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற இனக்கலவரங்களுக்கு அந்நாட்டின் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கண்டனம் தெரிவித்ததையும் இச்சம்பவங்கள் தொடர்பாக பிரதியமைச்சர் ஒருவரை அவர் பதவிநீக்கம் செய்துள்ளமையும் இலங்கையில் ஒரு நல்ல மாற்றம் தென்படுகிறது என்பதைக் காட்டுகிறது.

இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி சென்னையில் தெரிவித்தார்.

தி. மு. க. நிர்வாகக்குழு கூடி இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இம்மாதம் 15ம் திகதி சென்னையில் திரு. கருணாநிதி தலைமையில் நடத்த இருக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் குறித்து ஆராய்ந்தது.

இக்கூட்டத்திற்குப்பின் நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே திரு. கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக அண்மையில் சென்னையில் தொடர்ச்சியாக நடைபெற்ற தி. மு. க. ஆர்ப்பாட்டங்களில் கைதானவர்களை விடுதலை செய்யுமாறு தி. மு. க. விடுத்த வேண்டுகோளை எவ்வாறு அரசு அணுகுகின்றதோ அதைப்பொறுத்தே 15ம்திகதிய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்துவதா இல்லையா என்பதுபற்றி ஆராயப்படும். (இ)

## ஆயுதப்போட்டி, பட்டினி உலகைப் பயமுறுத்துகின்றன

### இந்திரா எச்சரிக்கை

புதுடில்லி, செப் 11

பட்டினியும் ஆயுதப் போட்டா போட்டியும் உலகைப் பயமுறுத்தி வருகின்றன என இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

பிரான்சின் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அணு ஆயுதப் போரை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம். எமது பொருளாதாரமும் மோசமான நிலையை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. இதற்கு உடனடி நிவாரணம் காண வேண்டும் என்றும் கூறினார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக்கைச் சந்திக்க வேண்டி இன்னும் வரவில்லை என்றும் திருமதி காந்தி கூறினார். (இ)

ஐ. நா. பொதுச் செயலாளர்

## வால்ட்ஹெய்ம் மீண்டும் போட்டி

நியூயோர்க், செப் 11

ஐக்கிய நாடுகள் சபை பொதுச்செயலாளர் டாக்டர் குர்த்வால்ட்ஹெய்ம் மீண்டும் தாம் இப்பதவிக்குப் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளார்.

ஆஸ்திரியாவைச் சேர்ந்த 62 வயதான டாக்டர் வால்ட்ஹெய்ம் இதற்கு முன்னர் மூன்று தடவைகள் இப்பதவியை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை இத்தேர்தலில் போட்டியிடப் போவதாக தன்சானியாப் பிரதிநிதியும் தெரிவித்துள்ளனர். (இ)

## வினோபாவே பிறந்ததினம்

புதுடில்லி, செப் 11

ஆச்சார்யா வினோபாஜியின் 86-வது பிறந்ததினம் இன்று வெள்ளிக்கிழமை இந்தியாவில் கொண்டாடப்படுகிறது.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி வினோபாவின் பிறந்தினம் குறித்து வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். (இ)

## தகவல் தொடர்பு ஆண்டு

நியூயோர்க், செப். 11

ஐக்கிய நாடுகள்சபை 1983ஐ உலக தகவல் தொடர்பு ஆண்டாக பிரகடனம் செய்ய உத்தேசித்துள்ளது.

தொடர்பு அமைப்புகளை உலகெங்கும் பலப்படுத்துவதே ஐ. நா. சபை வகுத்துள்ள பாரிய திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே 1983 தகவல் தொடர்பு ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட விருக்கின்றது.

தகவல் பரிமாற்றத்திலுள்ள குறைபாடுகளே பொருளாதார சமூக வளர்ச்சிக்கு மிகப்பெரும் முட்டுக்கட்டையாகவிருப்பதால் இவற்றை குறிப்பாக வளர்முக நாடுகளிலே நீக்கவல்ல ஒரு செயற்திட்டத்தை சபை தயாரித்துள்ளது.

## சோவியத் முஸ்லிம்கள் கண்டனம்

மாஸ்கோ, செப். 11

"அமெரிக்க நிர்வாகத்தின் அண்மைக்கால நடவடிக்கைகளினால் இன்றைய சர்வதேச நிலைமை உக்கிரப்படுத்தப்பட்டுள்ளது. இது எமக்கு ஆழ்ந்த கவலையை அளிக்கிறது" என்று சோவியத் முஸ்லிம் மத பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

தாசுகென்தாவையும் கடகாஸ்ஸ் பகுதிகளையும் சேர்ந்த முஸ்லிம் மத ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் மஹச்கலா நகரில் கூடி அமெரிக்க நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தனர்.

"நியூட்ரன் ஆயுதங்களை உற்பத்தி செய்து தயார் நிலையில் வைப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி றேகன் எடுத்த முடிவு குறித்து நாம் கவலை கொண்டுள்ளோம். உலகில் எப்பகுதியிலாவது அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் நலன்கள் பாதிக்கப்படுமானால் அப்பகுதிகளில் இந்த நியூட்ரன் குண்டு பாவிக்கப்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். இத்தத்திட்டம் உலக மக்களனைவருக்கும் பேரச்சுறுத்தலை ஏற்படுத்துவதுடன் அணுவாயுத யுத்த படுத்தும் அபாயத்தை அதிகரித்துள்ளது" என்று இவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஜோர்டான் மன்னரைக் கொல்லச் சதி!

பெய்ரூட், செப் 11

ஜோர்டான் மன்னர் ஹுசேலை லிபெபியில் கொலைசெய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக பெய்ரூட் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

இக்கொலை முயற்சிக்குத் தாமே பொறுப்பு என ஜோர்டான் புரட்சிக்குழு தொலைபேசிமூலம் அறிவித்துள்ளது.

## கட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவை

சென்னை, செப். 11

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகம் எங்கும் இன்று நடைபெற இருக்கும் ஹர்த்தாலை முன்னிட்டு ரயில் சேவைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று தென்னரயில்வே அறிவித்துள்ளது.

ஹர்த்தாலையொட்டி ரயில்களில் அதிக பிரயாணிகள் பிரயாணம் செய்யமாட்டார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் சில சேவைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன என்றும் தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. (இ)

## ராஜ்யசபையில் கூச்சல், குழப்பம்

புதுடில்லி, செப் 11

இந்திய நிதியமைச்சர் திரு. வெங்கட்ராமன்மீது எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட உரிமைமீறல் புகார்மீது ராஜ்யசபையில் விவாதம் நடைபெற்றபோது சபையில் நீண்டநேரம் கூச்சலும் குழப்பமுமாக இருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு: வெங்கட்ராமன் சபைக்குத் தவறான தகவலைக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின்பேரிலேயே இந்த உரிமைமீறல் பிரச்னை எழுப்பப்பட்டது. (இ)

## பலர் கொலை

தெஹ்ரான் செவ்.

தெஹ்ரானில் ஈரானிய அரசுக்கு எதிராக இடம்பெற்ற 3 ஊர்வலங்களைக் கலைப்பதற்கு பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் பலர் கொல்லப்பட்டனர் என்றும் நூற்றுக்கணக்கானோர் காயப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இறந்தோரின் எண்ணிக்கை பற்றித்து எதுவித தகவலும் வெளிவரவில்லை. (இ)


இசை உலகில் ஒரு புதிய படைப்பு அக்பா உயர்சக்தி கஸெட்




விலை ரூபா 28/50.

கான மழையின் இனிமையில் உங்களை மெய் மறக்கச்செய்யும் கணீர் என்ற தெளிவான தொனியையும், தணிந்த ஓசையையும் அகல் வீச்சு ஒலியையும் தருபவை அக்பா கஸெட்கள்.

இசைக் கச்சேரியை நேரில் கேட்டு இரசிக்கும் உணர்வின் இனிமையைத் தருவது அக்பா.

தாம் மாறுதிருப்பதற்கென செலோபேன் உறைகளில் அடைக்கப்பட்டவை. உன்னத இசைவியக்கம். இலங்கைக்குச் சுச்சிதமானவை.

சீரிய 'ஓசை நயத்திற்கு' அக்பா.

கிடைக்குமிடங்கள்:

முன்னணி சில்லறை வியாபாரிகள்; இசைத்தட்டு விற்பனை நிலையங்கள்; மற்றும்

ஹேலீஸ் சில்லறை விற்பனை நிலையம்,

10, [illegible] வீதி, கொழும்பு 11. தொலைபேசி: 20052

## இப்படியும் நடக்கிறது

கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) எடுப்பதற்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் அவசியம் தேவை.

ஆனல் தமிழ்ப்பகுதிகளில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் [பிரதி] பெறுவதானல் அவை தமிழில்தான் கிடைக்கும்: கிடைக்கவேண்டும்.

இந்த நிலையில் கடவுச்சீட்டு பெறுவதற்கு விண்ணப்பப் பத்திரத்துடன் பிறப்பு அத்தாட்சி பத்திரமும் இணைக்கப் படும்போது இதனை, மொழி பெயர்த்து ஆங்கிலத்தில் தான் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இது கட்டாயம்.

**இது ஏன்... என்று பலர் கேட்கின்றனர்கள்.**

தமிழ் மொழியும் இந்த நாட்டின் தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டு இதற்கென தனியாக தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சும் அமைக்கப்பட்டபின்னர், ஏன் இந்த வேற்று மொழி ஆக்கிரமிப்பு! நியாயமான கேள்வி தான்!

ஊடுருவி



## கிராமோதய சபைகள் ஆலோசனைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

கிராமோதய சபைகள் அமைப்பது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் இம் மாதம் 14ம் திகதி நடைபெற விருக்கிறது. கொழும்பிலுள்ள பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற விருக்கும் இக்கூட்டத்தில் யாழ் அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு. தேவநேசன்நேசையாவும் உள்ளூராட்சி யாழ் மாவட்ட உதவி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட்டும் கலந்து கொள்வார்கள் [மா]

## இலங்கை--

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்கொள்ளும் ஹர்த்தால் சிறிது வியப்பளிக்கிறது' என்று தெரிவித்த பிரதமர், இலங்கைத் தமிழர் துன்பம் துடைக்க தாம் முயற்சிப்பதாகவும் கருத்து வெளியிட்டனர்

## தணிக்கை

பொதுசன பாது காப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினல் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

துன்னலை வாலிபர் கொலை:

# எதிரிகளுக்கு பிணை மறுப்பு

(புலோலி)

துன்னலை வாலிபர் கொலை சம்பந்தப்பட்ட எதிரிகள் இருவருக்குமான பிணை அனுமதி யாழ் நீதிமன்றத்தில் மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மே மாதம் 19ம் திகதி துன்னலை வடக்கைச்சேர்ந்த வாலிபரான இராசா. இராசகோபால் என்பவரை கொலை செய்ததாக குற்றம்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் 2ம் எதிரி மாணிக்கம் சின்னத்தம்பி, 3ம் எதிரியான வடிவேலு சரவணசிவா ஆகிய இரு எதிரிகளையும் பிணையில் விடுமாறு கோரி யாழ் மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்விண்ணப்பத்தின் மீது விசாரணை செய்த யாழ். மேல் நீதிமன்ற நீதவான் எதிரிகளின் பிணை அனுமதிக்குமறுப்புத்தெரிவித்து எதிரிகள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இக் கொலை வழக்கின் 1ம் எதிரி சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் ஏற்கனவே யாழ் மேல் நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சம்பத்தரிசியார் கல்லூரியிலிருந்து

# நியமனம்பெற்ற7வது ஆயர் அதிவந். சௌந்தரநாயகம்

## இராப்போசன விருந்தில் புகழாரம்

[நமது நிருபர்]

''மன்னர் மறைமாவட்டத்திற்கு புதியஆயராக நியமனம் பெற்றுள்ள அதிவந்தனத்துக்குரிய டாக்டர் ஈ. வி. தோமஸ் சௌந்தரநாயகம் ஏழாந்திகதி பிறந்த அதிர்ஷ்டமோ, என்னவோ தெரியாது, புனித சம்பத்திரிசியார் கல்லூரியிலிருந்து நியமனம் பெற்ற ஆயர்களுள் இவர் ஏழாவதாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியா கல்லூரி பழைய மாணவர் சங்கம், மன்னர் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள அதிவந்தனத்துக்குரிய டாக்டர்ஈ வி. தோமஸ்சௌந்தரநாயகத்திற்கு அளிக்கப்பட்ட இராப்போசன விருந்து வைபவத்திற்கு. தலைமைதாங்கி உரையாற்றிய, சங்கத்தலைவர் வணக்கத்துக்குரிய ஜி ஏ. எப் ஜோசெப் அடிகள் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''புனித சம்பத்தரிசியார் கல்லூரி, மறைக்கல்வியின் வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றி வருவதுடன், பல்துறை அறிஞர்களையும் காலத்துக்குக்காலம் உருவாக்கி வருகின்றது. தொடர்ந்தும் இப்பணி சிறக்கவேண்டுமென, ஆண்டவரை தியானம் செய்கின்றேன் என்றார்.

பழைய மாணவர் சங்க பிரமுகரும் யாழ்ப்பாண லயன்ஸ் கழக தலைவருமான திரு எஸ். செபஸ்தியாம்பிள்ளை உரையாற்றுகையில்' ''புதிய ஆயர், பல்துறைகளிலும் நிரம்பிய அனுபவம் பெற்றவர், தீவக மண்ணில் அவதரித்தவர். சமூகங்களுக்கிடையே இன ஐக்கியம் வளரவேண்டுமென விரும்புபவர். அவர் மன்னர் மாவட்டத்தின் ஆயராக தெரிவுசெய்யப்பட்டது அப்பகுதிமக்களின் அதிர்ஷ்டமென்றே கூறவேண்டும். அன்னரது சேவை, அன்றும், இன்றும், என்றும், பெயர் பெற்றுவிளங்கும்'' என்றார்.

பிரதமவிருந்தினராக அழைக்கப்பட்டிருந்த பொறியியலாளர் திரு. பி எம் அந்தோனிப்பிள்ளை உரையாற்றுகையில் ''பின்தங்கிய மாவட்டமான, மன்னர்ப் பகுதிக்கு டாக்டர் ஈ வி. தோமஸ் சௌந்தரநாயகம் ஆயராக நியமிக்கப்பட்டிருப்பது கத்தோலிக்க உலகில் பெருமகிழ்வுக்குரிய நிகழ்வாகும். அன்னர் சிறுவயதுமுதல், மறைக்கல்வியின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றிவருபவர். பல்வேறு இனமக்களும் சகோதர மனப்பான்மையுடன் வாழ, அன்னரது சேவை இன்று நாட்டுக்கு அவசியம் என்றார்.

அதிவந்தனத்துக்குரிய ஆயர் டாக்டர் ஈ. வி சௌந்தரநாயகம் நன்றி தெரிவித்து உரையாற்றுகையில், 'எனது பணி பற்றி இங்கு பலரும் குறிப்பிட்டார்கள்; எனக்கு ஆண்டவன் இட்ட பணியினை மனசலமின்றி நிறைவேற்றியேதீருவேன். அதற்கு உங்கள் ஒவ்வொருவருடைய ஜெயமும் அவசியம், இதனல், எனது பணியினை சிறப்பாக செய்ய முடியும்' என்றார்.

முன்னைநாள் உதவி அரசாங்க அதிபர் திரு பி பி ஏ தம்பிநாயகம் உட்பட மற்றும் சிலர் உரையாற்றினர்.


ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
ஆரம்பித்திருக்கும்
**உல்லாச பஸ் சேவை**
யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை
யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுதல்:
செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில்
கொழும்பிலிருந்து புறப்படுதல்:
திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்
யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:
(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 8310
(2) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: இல: 7596.
கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்
ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.
ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.
J. M. S. மிராண்டாஸ்
109, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
டிக்கட் விலை: ரூபா 65-00


## மரண அறிவித்தல்

### திருமதி ராசேஸ்வரி கனகசபாபதி
(இருபாலை றோட், கோண்டாவில் கிழக்கு.)

காலஞ்சென்ற திரு. கனகசபாபதி [இலங்கை வங்கி] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வே. அப்பையா, திருமதி அப்பையா அவர்களின் புதல்வியும், கிருபாகரன் [கொழும்பு மோட்டோர் ஸ்ரோர்ஸ்], கிருணாகரன் [நைஜீரியா], கனகரஞ்சிதம் [நைஜீரியா], கனகராஜினி [லண்டன்], அவர்களின் அன்புத் தாயும், கே. வி. மகாலிங்கம் [நைஜீரியா], டாக்டர் சதீசன் [லண்டன்], விமலாதேவி, சகலகலாவல்லி [நைஜிரியா], ஆகியோரின் அன்பு மாமியும், பிரகாஷ், அரவிந்தன், பிரஜீவன், கிருஷ்ணனந்த், கர்ணன், பிரதீபன், பிரசாந்தன், சஞ்சீவன், சுஜீவன், ராஜீவன் அவர்களின் அன்புப் பேத்தியாரும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற டாக்டர் பத்மநாதன், பஞ்சலிங்கம், புஸ்பராணி, ஜெயராணி, டாக்டர் பாலசுந்தரம், விமலராணி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னரது ஈமக்கிரியை சனிக்கிழமை [12-9-81] காலை 10 மணியளவில் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த அன்னரது இல்லத்தில் நடைபெறும்.

0919

## மரண அறிவித்தல்

### ச. சிவநாராயணமூர்த்தி

சாவகச்சேரியை வசிப்பிடமாக கொண்டவரும் இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தருமான ச. சிவநாராயணமூர்த்தி காலமானர். இவர் சுந்தராம்பிகை [இளைப்பாறிய ஆசிரியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி] அவர்களின் அன்புக்கணவரும், திருமதி. சிவமங்கை கைலாயநாதன் [விவசாயப்பகுதி குண்டகசாலை விரிவுரையாளர்), ரேணுகாதேவி, கிரியா [யாழ் மருத்துவ. பீடம்] சிவஉத்தமன் [யாழ் இந்துக்கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு பாலகிருஷ்ணமூர்த்தி [தென்னை ஆராய்ச்சி நிலையம்], திருமதி மீனட்சி தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், கைலாயநாதன் (விவசாயப்பரிசோதகர் பண்டாரவளை), அவரின் அன்பு மாமனரும் ஆவர். ஈமக்கிரியைகள் இன்று (12-9-81) சனிக்கிழமை காலை 10 மணிக்கு தாமோதரம் வீதி சாவகச்சேரியில் நடைபெற்று சாவகச்சேரி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

0921

இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 808ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஸ்ரீ செப்டம்பர் 12-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.